# இந்துசமயப்பண்பாட்டில் மாஸ்லோவின் தேவைக்கொள்கை

பிரவினா.டி[1], பிரவீனா.இ[2], அன்றூ ஜவன் றொசாந்தன்.பி[3]

**ஆய்வுச்சுருக்கம்:**

மனிதனுடைய வாழ்வின் ஒவ்வொரு நிலைகளிலும் சமயம் என்பது பிரதானமான ஒன்றாகும். அந்தவகையில் இந்து சமயத்தின் முக்கிய இலக்கியங்களான வேதங்கள், உபநிடதங்கள், மகாபாரதம் மற்றும் இராமாயணம் போன்றவற்றில் காணப்படும் பாடல்கள், மந்திரங்கள், தத்துவங்கள், சடங்குகள், கவிதைகள் மற்றும் கதைகள் போன்றவை மனிதர்களுடைய சுய எண்ணங்களை நல்வழிப்படுத்துவதிலும், நெறிப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகின்றன. மேலும் மனித வாழ்க்கையின் இலக்குகள் குறித்தும் எடுத்தியம்புகின்றன. எனவே இதனடிப்படையில் இந்துப் பண்பாட்டிற்கும் மாஸ்லோவின் தேவைக்கொள்கைக்கும் இடையிலான தொடர்பை அறிதல் எனும் நோக்கத்தின் அடிப்படையில் இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றைப் பயன்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் கணேசன்.பி என்பவரால் எழுதப்பட்ட இந்து மதமும் மனித வாழ்க்கையும் என்னும் நூலையும் தனபாலன்.பா என்பவரால் எழுதப்பட்ட பிரயோக உளவியல் என்னும் நூலையும் மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின் முடிவாக இந்துப்பண்பாட்டில் உள்ளடங்கும் வேதங்களில் குறிப்பிடப்படும் மனித வாழ்க்கையின் இலக்குகள் பற்றிய கருத்துக்களுடன் மாஸ்லோவின் தேவைக்கொள்கையானது பொருத்தப்பாடு டையதாகக் காணப்படுவதுடன் அவை இன்றளவும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன என்பது பெறப்பட்டது.

**திறவுச்சொற்கள்:** தேவைக்கொள்கை, இந்துசமயப்பண்பாடு, மாஸ்லோ, இலக்குகள், சக்கரங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1. ranjanpiravina@gmail.com
2. inaabhanu@gmail.com
3. invanroshanthan3@gmail.com